**ஜூன் – 17**

# TNPSC துளிகள்

- மேகக் கணிமச் சேவை வழங்கீட்டு நிறுவனமான ஓலா க்ருட்ரிம் ஆனது, க்ருதி எனப் படும் இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு சார் முகமைக் கட்டமைப்பினை அறிமுகப் படுத்தியுள்ளது.
    - இது வாடகை வண்டிச் சேவைகளை முன்பதிவு செய்யவும், பிற கட்டணங்களைச் செலுத்தவும் மற்றும் பிற பணிகளைச் செய்யவும் உதவும்.
- M V Wan Hai 503 எனும் சிங்கப்பூர் நாட்டின் சரக்குக் கப்பலானது, கேரளக் கடற்கரையில் உள்ள பேய்ப்பூர் கடற்கரையிலிருந்து 44 கடல் மைல் தொலைவில் வெடித்தது.
    - அது கொழும்புவிலிருந்து மும்பைக்குச் சென்று கொண்டிருந்தது.
- வடக்கு டெல்லியின் ஹோலம்பி கலனில் இந்தியாவின் முதல் மின்னணுக் கழிவு சார் சுற்றுச்சூழல் பூங்காவினை உருவாக்கும் திட்டத்தினை டெல்லி அரசு மேற்கொண்டு உள்ளது.
    - இது 51,000 டன்கள் வரையிலான மின்னணுக் கழிவுகளைச் செயலாக்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதோடு இதில் 2022 ஆம் ஆண்டு மின்னணுக் கழிவு மேலாண்மை விதிகளின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள சுமார் 106 வகை கழிவுகளும் அடங்கும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## மத்திய அரசின் திட்டங்களுக்கு தமிழ்நாட்டின் பங்கு

### Uneven split

For the Jal Jeevan Mission, cost sharing is to be done equally between the Centre and State, but in practice, the State's contribution works out to 55%

| Scheme | Beneficiaries | Stated sharing pattern (Centre: State) | Actual sharing pattern (Centre:State) |
|---|---|---|---|
| Pradhan Mantri Awas Yojana (PMAY) – Rural | 7,86,653* | 60:40:00 | **39:61** |
| Indira Gandhi National Old Age Pension Scheme | 13,70,679** | 100:0 | **17:83** (for beneficiaries aged up to 79)<br>**41.67:58.33** (for beneficiaries aged above 80) |
| Indira Gandhi National Disability Pension Scheme | 71,080 | 100:0 | **17: 83** (for beneficiaries aged up to 79)<br>**33.33:66.67** (for beneficiaries aged above 80) |

G. MOORTHY



**As on June 13, 2025, the number of houses completed was 6,41,883 against 7,44,025 sanctioned houses*
***As in February 2025*

- குறைந்தபட்சமாக மத்திய அரசின் ஆறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசை விட தமிழ்நாடு அரசு அதிக நிதியினைப் பங்களிக்கிறது.
- தேசிய சமூக உதவித் திட்டம் (NSAP) - இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத்

திட்டம் (IGNOAPS), இந்திரா காந்தி தேசிய விதவை ஓய்வூதியத் திட்டம் (IGNWPS) மற்றும் இந்திரா காந்தி தேசிய மாற்றுத் திறனாளி ஓய்வூதியத் திட்டம் (IGNDPS) ஆகிய மூன்று திட்டங்கள் இதில் அடங்கும்.

- இவற்றில் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (PMAY)- கிராமப் பகுதி, பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) மற்றும் ஜல் ஜீவன் திட்டம் (JJM) ஆகியவையும் அடங்கும்.
- மத்திய அரசினால் முழுமையாக நிதியளிக்கப்பட்ட NSAP திட்டமானது 1995 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கப்பட்டது.
- இருப்பினும், நமது மாநில அரசானது இந்தப் பகுதியில் ஒரு முன்னோடியாக இருந்து வருகிறது என்பதோடு மேலும் இது 1962 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தினைச் செயல்படுத்தத் தொடங்கியது.
- 1974 மற்றும் 1984 ஆகிய சில ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ஒரு காலத்தில், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், வேளாண் தொழிலாளர்கள் மற்றும் திருமணத்திற்குப் பிறகு ஆதரவற்ற அல்லது கைவிடப் பட்டப் பெண்கள் என நான்கு வகை ஆதரவற்ற நபர்களுக்கு இந்த நலத் திட்டத்தின் நோக்கத்தினை விரிவுபடுத்தியுள்ளது.
- இவை அனைத்தும் 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குப் பிறகு அகில இந்தியத் திட்டத்தில் இணைக்கப்பட்டன.

# சர்வதேசச் செய்திகள்

## ரைசிங் லயன் நடவடிக்கை




- இஸ்ரேல் அரசானது ரைசிங் லயன் நடவடிக்கையின் கீழ் ஈரான் நாட்டின் அணுசக்தி தளங்களைக் குறி வைத்து தாக்கியது.
- இந்த உயர் நிலை இலக்குகளில் நடன்ஸ் மற்றும் ஃபோர்டோவில் உள்ள சில அணுசக்தி நிலையங்களும் அடங்கும்.
- கோண்டாப் மற்றும் கோர்ராமாபாத்தில் உள்ள அணுசக்தித் தளங்களும் குறிவைக்கப் பட்டன.
- இந்த நடவடிக்கையானது, ஈரான் நாட்டின் ராணுவத்தை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டு ள்ளது.
- ஈரான் நாட்டின் புரட்சிகர இராணுவப் படையின் (IRGC) விமானப்படை தளபதி அமீர் அலி ஹாஜிசாதே இஸ்ரேலின் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

- IRGC தளபதி ஹொாசைன் சலாமி மற்றும் ஈரானிய ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதி மேஜர் ஜெனரல் முகமது பகேரி ஆகியோரும் கொல்லப்பட்டனர்.
- கடந்த ஆண்டின் ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களில் இஸ்ரேல் மீது ஈரானின் உந்து விசை எறிகணை மற்றும் ஆளில்லா விமானங்களின் தாக்குதல்களுக்கு IRGC விமானப் படைப் பொறுப்பேற்றது.
- அதற்கு ஒரு பதிலடி கொடுக்கும் விதமாக, ஈரான் நாடானது இஸ்ரேலைத் தாக்கி, ட்ரூ பிராமிஸ் III எனும் நடவடிக்கையினைத் தொடங்கியது.

# பொருளாதாரச் செய்திகள்

## முதலீட்டாளர்களுக்கான புதிய UPI பண வழங்கீட்டுச் செயல்முறை





- இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) ஆனது இந்த முக்கியச் செயல்முறையினைச் செயல்படுத்த உள்ளது.
- பங்குச் சந்தையில் பதிவு செய்யப்படாத நிறுவனங்களிலிருந்து முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதே இதன் நோக்கமாகும்.
- பணம் செலுத்துவதற்கு முன்பு முதலீட்டாளர்கள் SEBI வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட சட்டப்பூர்வ இடைத்தரகர்களை எளிதாக அடையாளம் காண இது அனுமதிக்கும்.
- பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் ஆனது பெருமளவில் முதலீட்டாளர்களை தவறான முறையில் வழி நடத்தி, முறையான அங்கீகாரம் இல்லாமல் இந்நிதிகளைச் சேகரித்து உள்ளன.
- பதிவு செய்யப்பட்ட இடைத்தரகர்களின் UPI அடையாளக் குறியீடுகள் அல்லது வங்கி விவரங்களின் உண்மைத் தன்மையை நன்கு சரிபார்க்க 'SEBI Check' என்ற புதியதொரு கருவியையும் இது உருவாக்கி வருகிறது.
- புதிய செயல்முறையின் கீழ், பயனர் பெயர் ஆனது இடைத் தரகரால் தேர்ந்தெடுக்கப் பட்ட எளிதில் படித்து புரிந்துகொள்ளும் வகையிலான மற்றும் அவர்களின் வகையை மிகவும் தெளிவாக அடையாளம் காட்டும் கட்டாயப் பின்னொட்டுடன் கூடிய பெயராக

இருக்கும்.

- ஒரு பங்குத் தரகருக்கான பின்னொட்டு '.brk' ஆகவும், ஒரு பரஸ்பர நிதிக்கு '.mf' ஆகவும் இருக்கும்.
- சரி பார்க்கப்பட்ட UPI ஆனது, சுயச் சான்றளிக்கப்பட்ட சிண்டிகேட் (கூட்டு நிறுவனம்) வங்கியின் பெயருடன் இணைந்து "@valid" என்ற தனித்துவமான மற்றும் பிரத்தியேக அடையாளங் காட்டியாக இருக்கும்.
- சரிபார்க்கப்பட்ட UPI ஆனது, SEBI வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட இடைத் தரகர்களால் பணம் வசூலிப்பதற்காக மட்டுமே பிரத்தியேகமாக இந்தியத் தேசியக் கொடுப்பனவுக் கழகத்தினால் (NPCI) ஒதுக்கப்படும்.
- NPCI என்பது நம் நாட்டில் சில்லறைக் கொடுப்பனவுகள் மற்றும் தீர்வு அமைப்புகளை இயக்கவதற்கான ஒரு முதன்மை அமைப்பாகும் என்பதோடு இது அதற்கென ஒரு UPI தளத்தைச் சொந்தமாகக் கொண்டு செயல்படுகிறது.

## இந்தியாவின் சில்லறைப் பணவீக்கம் - ஜூன் 2025




- இந்தியாவின் சில்லறைப் பணவீக்க விகிதம் ஆனது, 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில் 75 மாதங்களில் இல்லாத அளவிற்கு 2.8% ஆகக் குறைந்தது.
- கடந்த ஆறு ஆண்டுகளில் முதல் முறையாக இது 3 சதவீதத்திற்கும் கீழே சரிந்தது.
- இது கடைசியாக 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இதை விடவும் குறைவாக இருந்தது.
- இது நுகர்வோர் விலைக் குறியீட்டு (CPI) தரவுகளின் படி வழங்கப்பட்டுள்ளது.
- இதில் சில காய்கறிகளின் விலைகள் அதிகரித்த போதிலும், உணவுப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைவதே இந்தச் சரிவுக்கு முதன்மையாகக் காரணமாகும்.
- இருப்பினும், சமையல் எண்ணெய்கள் மற்றும் பழங்களில் பதிவான இரட்டை இலக்கப் பணவீக்கம் ஆனது பரந்த மிதமான தன்மையை ஓரளவு ஈடுகட்டியது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## யூரேசிய நீர்நாய் – காஷ்மீர்

- லிடர் நதியில் யூரேசிய நீர்நாய் மீண்டும் தென்பட்டுள்ளது.


- இது கடந்த 30 ஆண்டுகளாக காஷ்மீரில் அழிந்துவிட்டதாகக் கருதப்பட்டது.
- இந்தப் பகுதியளவு நீர் வாழ் வகைபாலூட்டியானது உள்ளூரில் வுடர் என்று அழைக்கப் படுகிறது.
- இது சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தினால் (IUCN) 'அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனமாக' வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- இப்பழைய தரவுகள் ஆனது, தச்சிகம் தேசியப் பூங்கா மற்றும் தால் ஏரிக்கு நீரளிக்கும் நீரோடைகள் போன்ற பகுதிகளில் அதன் எண்ணிக்கையைக் குறிப்பிடப் படுகிறது.
- நீர் மாசுபாடு மற்றும் அதன் ரோமங்களுக்காக அதனை வேட்டையாடுதல் காரணமாக அதன் எண்ணிக்கை கடுமையாகக் குறைந்துள்ளது.
- ஒரு மாமிசம் உண்ணும் பாலூட்டியாக, இது மீன் மற்றும் பிற நீர்வாழ் விலங்கு இனங்களை உண்டு, அவற்றின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த உதவுகிறது.
- அவை வாழ்வதற்குத் தூய்மையான நீர் மற்றும் ஏராளமான இரை தேவைப்படுகிறது என்பதால், நீர்நாய்களின் இருப்பு ஆனது ஒரு மிகச் சீரான சுற்றுச்சூழல் அமைப்பைக் குறிக்கிறது.
- இந்தியாவில், இது மிக முதன்மையாக வடக்கு மற்றும் வடகிழக்கு மாநிலங்களிலும், தெற்குப் பகுதிகளிலும் காணப்படுகிறது.
- இந்தியாவில், 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இரண்டாம் அட்டவணையில் இது வகைப்படுத்தப் பட்டுப் பாதுகாக்கப்படுகிறது.
- கூடுதலாக இது அருகி வரும் உயிரினங்களின் மீதான சர்வதேச வர்த்தகத்தினை நன்கு ஒழுங்குபடுத்தச் செய்கின்ற, CITES உடன்படிக்கையின் முதலாவது பின் இணைப்பில் பட்டியலிடப் பட்டுள்ளது.




## AviList 2025

- இது பறவை இனங்களின் முதல் ஒருங்கிணைந்த உலகளாவியச் சரிபார்ப்புப் பட்டியல் ஆகும்.

- இது பறவைகளின் வளங்காப்பு முயற்சிகளுக்கு மிக முக்கியமானதாக கருதப் படும் பறவை வகைபிரிப்பில் தெளிவு மற்றும் நிலைத் தன்மையை வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பறவை சரிபார்ப்புப் பட்டியல்கள் குறித்தச் செயற்குழுவின் நான்கு ஆண்டு பணிக்குப் பிறகு இது செயல்பாட்டுக்கு வந்தது.
- இந்தப் புதிய சரிபார்ப்புப் பட்டியல் ஆனது சர்வதேசப் பறவையியல் குழு (IOC) மற்றும் கிளெமென்ட்ஸ் பட்டியலுக்கு மாற்றாக இருக்கும் என்பதோடு இது ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படும்.
- இது BirdLife International அமைப்பின் அறிக்கையின்படி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- BirdLife International என்பது பறவைகள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களை மிக நன்குப் பாதுகாக்கச் செயல்படும் அரசு சாரா நிறுவனங்களின் உலகளாவியக் கூட்டாண்மை ஆகும்.
- பறவைகள் மீதான சரிபார்ப்புப் பட்டியல்களுக்கான ஒரு செயற்குழுவில் பேர்டு லைப் இன்டர்நேஷனல், கார்னல் பறவையியல் ஆய்வகம், அமெரிக்கப் பறவையியலாளர் சமூகம், சர்வதேசப் பறவையியலாளர் ஒன்றியம் மற்றும் அவிபேஸ் (Avibase) அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்குவர்.
- இந்தப் பட்டியலில் 11,131 இனங்கள், 19,879 கிளையினங்கள், 2,376 பேரினங்கள், 252 குடும்பங்கள் மற்றும் 46 வரிசைகள் உள்ளன.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்


## உலகளாவிய போக்குகள் குறித்த அறிக்கை: 2024 ஆம் ஆண்டில் கட்டாய புலம் பெயர்வு

- இது ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஆணையரகத்தினால் (UNHCR) வெளியிடப்பட்டது.
- கட்டாய புலம்பெயர்வு என்பது துன்புறுத்தல், வன்முறை, மனித உரிமை மீறல்கள், பேரழிவுகள் போன்ற காரணிகளால் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறும் நபர்களின் சூழ்நிலைகளைக் குறிக்கிறது.
- 2024 ஆம் ஆண்டின் இறுதியில் உலகளவில் 123.2 மில்லியன் மக்கள் வலுக் கட்டாயமாக புலம்பெயர்ந்தனர்.
- வலுக் கட்டாயமாக புலம்பெயர்ந்த மக்களில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானோர்

சூடான், சிரியா, ஆப்கானிஸ்தான் அல்லது உக்ரேனிய நாட்டினைச் சேர்ந்தவர்கள் ஆவர்.




## கார்பன் விலை நிர்ணயத்தின் நிலை மற்றும் போக்குகள் 2025




- இது உலக வங்கியினால் கார்பன் விலை நிர்ணயத்தின் நிலை மற்றும் போக்குகள் 2025 என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையாகும்.
- கார்பன் விலை நிர்ணயக் கருவிகள் ஆனது பசுமை இல்ல வாயு (GHG) உமிழ்வுகளின் வெளிப்புறச் செலவினங்களை ஆய்வு செய்கின்றன.
- பயிர்களுக்குச் சேதம், வெப்ப அலைகள் மற்றும் வறட்சியால் ஏற்படும் சுகாதாரச் செலவினங்கள் மற்றும் வெள்ளம் மற்றும் கடல் மட்ட உயர்வு ஆகியவற்றால் ஏற்படும் சொத்து இழப்பு போன்ற இந்த வெளிப்புறச் செலவினங்கள் மிகப் பொதுவாக பொது மக்களால் மேற்கொள்ளப்படுகின்றன.
- கார்பன் விலை நிர்ணய வழிமுறைகள் ஆனது, பொதுவாக வெளியிடப்படும் கார்பன் டை ஆக்சைடு (CO2) மீதான விலை மூலம் இந்தச் செலவினங்களை அவற்றின் சில மூலங்களுடன் இணைக்கின்றன.
- இந்த ஒரு அறிக்கையானது, உமிழ்வு வர்த்தக அமைப்பு (ETS), கார்பன் வரிகள் மற்றும்

கார்பன் மதிப்பு வர்த்தக வழிமுறைகள் ஆகிய மூன்று வகையான கார்பன் விலை நிர்ணய கருவிகளை உள்ளடக்கியது.

- ETS என்பது உமிழ்வு அமைப்புகளால் உருவாக்கப் படும் GHG உமிழ்வுகளின் அளவு அல்லது தீவிரத்தில் அரசாங்கங்கள் ஒரு வரம்பை நிர்ணயிப்பதை உள்ளடக்கியது.
- நிறுவனங்கள் தங்கள் இலக்குகளை அடைய உமிழ்வு அலகுகளை வர்த்தகம் செய்ய அனுமதிக்கப்படுகின்றன.
- அவை தங்கள் உமிழ்வைக் குறைக்க என உள்நடவடிக்கைகளைச் செயல்படுத்தினால், இந்த அலகுகளை மற்ற உமிழ்வு அமைப்புகளுக்கு அவை விற்கலாம்.
- கார்பன் வரியானது பசுமை இல்ல வாயுக்கள் வெளியேற்றம் அல்லது புதைபடிவ எரி பொருட்களின் கார்பன் உள்ளடக்கம் மீதான வரி விகிதத்தை வரையறுப்பதன் மூலம் கார்பன் மீது வெளிப்படையாக விலை நிர்ணயம் செய்கிறது.
- அரசாங்கங்கள் தங்கள் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்திற்காக நிறுவனங்கள் மீது இந்தக் கட்டணத்தை விதிக்கலாம்.
- ஒரு மதிப்பு வழங்கீட்டுச் செயல்முறையானது, உமிழ்வைக் குறைக்கும் (எ.கா., நிலப் பரப்புகளில் இருந்து மீத்தேன் பிடிப்பு) அல்லது அவற்றை அகற்றும் (எ.கா., காடு வளர்ப்பு மூலம் கார்பன் பிடிப்பு) பல்வேறு செயல்பாடுகள் மூலம் உருவாக்கப்படும் மதிப்புகளை (ஒவ்வொன்றும் சுமார் 1 டன் கார்பனுக்குச் சமம்) வர்த்தகம் செய்ய அனுமதிக்கிறது.
- பின்னர் இந்த நிறுவனங்கள் தங்கள் சொந்த உமிழ்வை ஈடு செய்ய இந்த மதிப்புகளை வாங்கலாம்.
- உலக நாடுகள் ஆனது, தற்போது உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் மூன்றில் இரண்டு பங்கைக் குறிக்கின்ற கார்பன் விலை நிர்ணயத்தினை அதிகளவில் ஏற்றுக்கொள்கின்றன.
- செயல்பாட்டில் உள்ள கார்பன் விலை நிர்ணய கருவிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது என்பதோடு 2005 ஆம் ஆண்டில் 5 ஆக இருந்த இது இன்று 80 ஆக அதிகரித்துள்ளது.
- இந்தியா, பிரேசில் மற்றும் துருக்கி ஆகியவை அவற்றை மிகவும் தீவிரமாக உருவாக்கி வருகின்றன.
- கார்பன் விலை நிர்ணயக் கருவிகள் தற்போது உலகளாவியப் பசுமை இல்ல வாயு உமிழ்வில் தோராயமாக 28 சதவீதத்தை உள்ளடக்கியது.
- பெரும்பாலான புதிய மற்றும் திட்டமிடப்பட்ட கருவிகள் ETSகள் என்று இந்த அறிக்கை குறிப்பிட்டது.
- இந்தியாவின் ETS என்பது விகித அடிப்படையிலானதாக இருக்கும் என்பதாக, அதாவது இந்த உமிழ்வுகளுக்கு இங்கு வரம்பிடப்படவில்லை.
- அதற்குப் பதிலாக, உமிழ்வு அமைப்புகளுக்கு அவற்றின் நிகர உமிழ்வுகளில் வரம்பாக செயல்படும் செயல்திறன் அளவுருக்கள் ஒதுக்கப்படுகின்றன.
- பல்வேறு துறைகளில், கார்பன் விலை மீதான நிர்ணயம் ஆனது மின் துறையில் மிக அதிகமாகவும், அதைத் தொடர்ந்து தொழில்துறை, சுரங்கம் மற்றும் அகழந்தெடுப்பு / பிரித்தெடுக்கும் துறை, கட்டிடங்கள், நிலம் சார் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து ஆகிய துறைகளும் உள்ளன.
- இருப்பினும், கழிவுகள் மற்றும் வேளாண்மை ஆகிய துறைகளில் மிகப் பெரும்பாலும் கார்பன் விலை நிர்ணயம் மேற்கொள்ளப்படாமல் உள்ளது.
- தேசிய நிர்ணயிக்கப்பட்டப் பங்களிப்புகள் ஆனது தேசியப் பருவ நிலை இலக்குகளை பூர்த்தி செய்ய பாரிசு உடன்படிக்கையின் 6வது பிரிவின் கீழ் சர்வதேசக் கார்பன்

மதிப்புகளுக்கான ஒரு நாட்டின் தேவை ஆகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## விம்பிள்டனின் பரிசுத் தொகை 2025

- இது அதிகபட்சமாக 53.5 மில்லியன் யூரோ (சுமார் 73 மில்லியன் டாலர்) ஆக உயர்ந்து உள்ளது என்பதோடு இதில் ஒற்றையர் சாம்பியன்கள் ஒவ்வொருவரும் 3 மில்லியன் யூரோ (4 மில்லியன் டாலர்) பெறுவர்.
- அனைத்து இங்கிலாந்து கிளப் குழுவின் அதிகாரிகள் இதனை அறிவித்தனர்.
- இந்த ஆண்டு, பழமையான இந்த கிராண்ட்ஸ்லாம் போட்டியில் முதல் முறையாக, கள நடுவர்களுக்குப் பதிலாக மின்னணு முறையிலான ஒரு கள இணைப்பு வசதி அறிமுகப் படுத்தப்பட உள்ளது.



WIMBLEDON GENTLEMEN'S AND LADIES' SINGLES PRIZE MONEY

| 2025 | | 2024 |
|---|---|---|
| £3,000,000 (+11.1%) | WINNER | £2,700,000 |
| £1,520,000 (+8.6%) | RUNNER-UP | £1,400,000 |
| £775,000 (+8.4%) | SEMI-FINALISTS | £715,000 |
| £400,000 (+6.7%) | QUARTER-FINALISTS | £375,000 |
| £240,000 (+6.2%) | FOURTH ROUND | £226,000 |
| £152,000 (+6.3%) | THIRD ROUND | £143,000 |
| £99,000 (+6.5%) | SECOND ROUND | £93,000 |
| £66,000 (+10%) | FIRST ROUND | £60,000 |

TOTAL FOR THE SINGLES CHAMPIONSHIPS: £38,828,000

TOTAL PRIZE POST FOR THE 2025 CHAMPIONSHIPS: £53,500,000

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★